**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 190/2023** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | **கிருஷ்ணமூர்த்தி** |
| Father Name | : | **கந்தசாமி** |
| Age | : | **69** |

**All accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.03.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது செங்கப்பள்ளியில் வசித்து வருகிறேன். நான் காயத்ரி மளிகை கடை நடத்தி வருகிறேன். எனது மாமியார் சரஸ்வதிக்கு ஊத்துக்குளி ரோடு ஸ்டேட் பேங்க் ஏடிஎம் எதிரே வீடு உள்ளது. கடந்த 27.03.2023 ஆம் தேதி மாலை 06.30 மணி அளவில் அவரது வீட்டை பூட்டிவிட்டு அங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள எனது வீட்டிற்கு வந்துவிட்டார். மறுநாள் மதியம் ஒரு மணி அளவில் எனது மாமியார் வீட்டிற்கு மேலே கொடியிருக்கும் ராஜகோபால் என்பவர் எனக்கு போன் செய்து எனது மாமியாரின் வீட்டு கதவில் உள்ள பூட்டு உடைக்கப்பட்டுள்ளதாக தகவல் சொன்னார்.

2. நான் உடனே கிளம்பி அங்கு சென்று பார்த்த போது பெட்ரூமில் இருந்த பீரோ உடைக்கப்பட்டு இருந்தது, பீரோவில் இருந்த நகை, பணம், ஹாலில் இருந்த எல் இ டி டிவி ஆகியவை களவு போயிருந்தது. எனது மாமியாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், மருத்துவமனைக்கு சென்று வந்துவிட்டு, நான்கு ஐந்து நாட்கள் கழித்து ஊத்துக்குளி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரை நானே

எழுதிக் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **( புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது)**

2. மறுநாள் போலீசார் வந்து வீட்டை பார்த்து சென்றார்கள். 20.04.2023 ஆம் தேதி எனது மாமியார் வீட்டில் பொருள்களை திருடிய நபரை பெருந்துறை போலீசார் பிடித்துள்ளதாகவும், என்னை காவல் நிலையம் வருமாறும் சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்ற போது இதனை ராமஜெயம் தான் எனது மாமியார் வீட்டில் பொருள்களை திருடியதாக போலீசார் சொன்னார்கள். மேலும் போலீசார் எனது மாமியார் வீட்டில் அவர்கள் திருடிய பொருட்களை விற்று விட்டதாகவும், விற்ற தொகை ரூபாய் 18 ஆயிரத்தை காவல் நிலையத்தில் ஒப்படைச்சதாகவும் சொன்னார்கள். நான் அந்த பணத்தை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் எனது மாமியார் வீட்டில் களவு போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரிலோ விசாரணை வாக்குமூலத்திலோ நகைகளை வடிவம் பற்றியும், டிவியின் கம்பெனி பெயர் பற்றியும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியில்ல. போலீசார் கேட்டதன் பெயரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.05 17:56:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 190/2023** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | **ராஜலிங்கம்** |
| Father Name | : | **பழனிச்சாமி** |
| Age | : | **29** |

**All accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.03.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது செங்கப்பள்ளியில் வசித்து வருகிறேன். நான் பர்னிச்சர் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 24.03.2023 ஆம் தேதி ராஜகோபாலை பார்க்க நான் சென்றபோது திருட்டு நடந்தது சம்பந்தமாக வரைபடம் வரைந்து விவரம் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**பார்வை மகஜரில் உள்ள அ.சா.2ன் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

உன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தின் அருகே வைத்து கையொப்பம்

செய்ததாக போலீசார் கேட்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.05 17:56:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 190/2023** |
| Deposition of witness | : | **PW-3** |
| Name | : | **சுரேஷ்குமார்** |
| Father Name | : | **ரங்கசாமி** |
| Age | : | **46** |

**All accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.03.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது ஊத்துக்குளியில் வசித்து வருகிறேன். நான் மெடிக்கல் ஷாப் வைத்துள்ளேன். கடந்த 20.04.2023 ஆம் தேதி மாலை 6.30 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து எதிரி ராமஜெயத்தின் மனைவி எழிலரசி ஆஜர் செய்த ரூபாய் 18,000/- க்கு சாட்சியாக நானும் சண்முகம் என்பவரும் கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.3ன் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் சொல்வது போல் அன்றைய தினம் நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றாலும், எழிலரசி நான் சொல்வது போல் எந்த ஒரு தொகையையும் ஆஜர் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் பூர்த்தி செய்யப்படாத படிவத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

நான் போலீசார் கேட்டதன் பெயரில் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்த போலீசாரின் பெயர் பதவி நிலை எனக்கு தெரியாது என்றால் உதவி ஆய்வாளர் பாலமுருகன். நான் அன்றைய தினம் காவல் நிலையத்தில் சுமார் ஒரு மணி நேரம் இருந்திருப்பேன். நான் போலீசார் கேட்டதின் பெயரில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B
DHARANEETHER

Digitally signed by B
DHARANEETHER
Date: 2026.03.05 17:57:12
+0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.